(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மாந்தை கிராம எல்லையில் நாட்டாற்றில் நெடுஞ்சாலைத்துறை கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் வண்டிப்பாலம் கட்ட ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

(இ) ஒப்பந்ததாரர் யார்?

(ஈ) ஒன்றியப் பொது நிதியிலிருந்து எவ்வளவு பணம் எந்த தேதியில் செலுத்தப்பட்டுள்ளது?

(உ) ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டு விட்டனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) இந்த வேலை ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது

(ஆ) ரூ. 3,24,000

(இ) திரு. ஆர். கே. ஏ. பொன்னுசாமி காங்கேயர், சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

(ஈ) மொத்த மதிப்பீட்டில் ரூ. 2,36,000-யை குத்தாலம் ஊராட்சி—ஒன்றிய ஆணையர் நெடுஞ்சாலைத்துறைக்கு நாள் 25–9–79-ல் செலுத்தியுள்ளார்.

(உ) வேலை இப்பொழுது துவக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் பணியாளர்களுக்கான பணி விதிகள்

*வினா எண். 1034—திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊர்நல அலுவலர்கள், உதவியாளர்கள் இவர்களுக்கு ஒரே பணி விதி ஆணையிடப்பட்டும் நாளதுவரை அமுலாக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம்எனில் எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) மற்றும் (ஆ)

ஊரகவளர்ச்சித்துறையின் பல்வேறு பணியாளர்களுக்கு ஒரே பணி விதிகள் ஏற்படுத்துவது பற்றி செயற்குறிப்பு இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது. விதிகள் வெளியிட்ட பின்னர் அமுல் செய்யப்படும்.